
# தமிழ்ச் சிட்டு



## என்றன் வாழ்க்கை மழையின் பொழிவு!

என்றன் உள்ளம்
வெட்ட வெளிச்சம்;
எங்கும் ஒளிவு மறைவில்லை!
என்றன் அறிவு
பழங்கள் தோட்டம்!
எவர்க்கும் உரிமைக் குறைவில்லை!

என்றன் செயல்கள்
நலம்விளை வயல்கள்!
எவரும் விளைவின் பயன் பெறலாம்!
என்றன் விளைவு
பொதுமைப் பூங்கா!
எவரும் நுகர்ந்தே மகிழ்வுறலாம்;

என்றன் வாழ்க்கை
மழையின் பொழிவு!
எவரும் நனைந்தே பருகிடலாம்!
என்றன் மறைவு
கதிரவன் வீழ்ச்சி!
எவரும் அதற்கே மெருகிடலாம்!

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

குரல் : 22
இசை : 10

விலை :
உருபா : 1-50

# தெரிந்து கொள்ளுங்கள்

O இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் ஓடும் மிகப் பெரிய ஆறு சிந்து ஆறு. சிந்து ஆறு இப்பொழுது பாக்கித்தானுக்குச் சொந்தமாயுள்ளது. இமயமலையில் உருவாகி சீலம், சீனுப், இரவி, பியாசு, சட்லெச் ஆகிய ஐந்து கிளையாறுகளைக் கொண்ட சிந்து ஆறு, கராச்சித் துறைமுகத்துக் கருகில அரபிக் கடலில் விழுகிறது. இந்த ஆற்றங்கரையில்தான் தமிழரின் மிகப் பழைய நாகரிகம் சிறந்து விளங்கியது என்று மாந்தவியல் வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். ஆற்றங்கரையில்தான் அரப்பா நாகரிகம் தலையெடுத்திருந்தது: சிந்து ஆற்றின் கீழ்ப்பகுதியிலுள்ள நிலப் பகுதியில்தான் மொகஞ்சதாரோ என்னும் மிகப் பண்டைய நகர நாகரிகமும் செழித்தோங்கியிருந்தது.

சிந்து ஆற்று நாகரிகத்துடன் தொடர்புள்ள வேறு 70 இடங்களையும் கூட புதை பொருள் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இவற்றுள் சில சிந்து ஆற்றின் மேற்பகுதியிலும், சில கங்கையாற்றின் மேற்பகுதியிலும், வேறு சில குசராத்திலும், நருமதை ஆற்று முகத்துக் கருகிலும் அமைந்திருந்தன. இவற்றிலிருந்துதான் இப் பழந் தமிழ் வட புல மக்கள் (திராவிடர்கள்) இந்தியாவின் வேறு நிலப்புலங்களிலும் பரவியிருந்தனர் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

புதை பொருள் ஆய்வாளர்கள் மொகஞ்சதாரோவிலும் (முகைந்ததரை—மறைந்ததரை—(தூய தமிழ்ச் சொல்), அரப்பாவிலும் (ஆறு+பாவு—ஆற்றுப்படுகை (தூய தமிழ்ச் சொல்) மாபெரும் நகரங்கள் புதையுண்டிருப்பதைக் கண்டுள்ளனர். (சிந்து, கங்கை என்னும் ஆறுகளின் பெயர்களும் தூய தமிழ்ச் சொற்களே சிந்து—நீர் சிந்துவது; கங்கை—கங்குல்—இருள் போலும் நீர் ஓடும் ஆறு. நீரின் தூய்மையைக் குறிக்கக் கருமை, நீலம் எனும் இரண்டு சொற்களும் தமிழில் சொலல்டைகளாகப் பயன்படுத்தப் பெறுவதைக் காணலாம். (எ-டு) கருகரு வெனும் நீர்; நீல நீர். இங்கு நீல ஆறு என்னும் பெயர் வழக்கால் அமைந்த நீலாறு—நைல் ஆறு என்னும் பெயரும் கருதத்தக்கது.)

அரப்பா, மொகஞ்சதாரோ என்னும் இந் நகரங்களில் பதிந்த மதிற் சுவர்களுக்குள் அமைந்த உள் நகரங்கள் இருந்தன. முகாமைக் கட்டிடங்கள் எல்லாம் உள் நகரத்திலேயே அமைந்திருந்தன. மதிலுக்கப்பால் அமைந்திருந்த புறநகரில் பொதுவான மக்கள் குடியிருப்புகளும், மதில்களும் ஒரே மாதிரியான கற்களால் கட்டப் பட்டிருந்தன, சில உலர்ந்த செங்கற்களினாலும் பெரும்பாலானவை சுட்ட செங்கற்களாலும் அமைக்கப்பட்டிருந்தன.

இவ்விரு நகரங்களிலும் பெரிய தவச(தானிய)க் களஞ்சியங்கள் அமைந்திருந்தன என்பது சிதைவுகளிலிருந்து புலனாகிறது. அவர்களுடைய முகாமை உணவு கோதுமையாக இருந்தது. **கோதுமை** என்னும் தவசப் பெபரும் தூய தமிழ்ச் சொல்லே,

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலைஇதழ்


இன்றைய பயனோ நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!


குரல் -22 (திபி2025) இரட்டை (சூன்-சூலை 94) இசை-10


## சாதி, மத மூட நம்பிக்கைகள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகள்!

இந்த இந்திய நாட்டிற்கு வெளியேயிருந்து வந்த ஆரியர்கள், இந்நாட்டின் பழங்குடித் தமிழ் மக்களை வீரத்தால் வெல்ல முடியாமல், சூழ்ச்சிகளாலும் தந்திரங்களாலும், மூடநம்பிக்கைகளான கருத்துகளைப் புகுத்தியும் அவர்களை ஒற்றுமை இழக்கச் செய்தும், வேறு வேறாகப் பிரித்தும், அவர்களுக்குள் பகைமை பாராட்டச் செய்தும், ஆட்சி இழக்கச் செய்தும் அடிமைப்படுத்தினர்; அறியாமையில் மூழ்கச் செய்தனர்; அவர்களை இழிவான பிறவிகள் எனத் தாழ்வு படுத்தினர்.

நடு ஆசியாவின் குளிர் பகுதியிலிருந்து அவர்கள் வந்ததால், வெப்ப நாடாகிய இந்நாட்டில் வசித்து வந்த பழங்குடித் தமிழ் மக்களை விட, ஆரியர்கள் நிறத்தால் வெளுத்தும் உருவத்தால் கொஞ்சம் திருத்த முற்று அழகாகவும் இருந்தனர். பழந்தமிழ்க் குடிமக்களோ நிறத்தால் கொஞ்சம் கறுத்தும், உருவத்தால் சிறிது பொலிவு குறைந்தும் காணப் பெற்றனர்.

எனவே, ஆரியர் தங்களைத் தேவர்கள், பிராமணர்கள் என்றும், தாங்கள் பிரமதேவன் என்பவன் முகத்திலிருந்து பிறந்தவர்கள் என்றும். பொய்யாகவும் புளுகாகவும் கூறி , நம் பழந்தமிழ்க் குடிகளை நம்பும்படி செய்தனர். ஆரியர்கள் பேசி வந்த வேதமொழி என்னும் செப்பமும் செழுமையும் இல்லாத ஒருவகைக் கரடு முரடான மொழி, நம் பழந்தமிழர்க்கு விளங்காமலிருந்ததால், அவ் வேதமொழியைத் தேவமொழி என்றும், அதிலேயே தேவர்களும் தெய்வங்களும் பேசிக் கொள்கிறார்கள் என்றும் கற்பனையாகப் பொய்கூறி, அப்பழந் தமிழ் மக்களை ஏமாற்றினர். அன்பிலும் விருந்தோம்பலிலும் பண் பாட்டிலும் நாகரிகத்திலும் ஆரியர்களை விடப் பல மடங்கு முன்னேறி மேம்பட்டிருந்த பழந்தமிழர்கள் ஆரியர்கள் கூறிய பொய்யுரைகளை முழுமையாக நம்பி அவர்களுடைய கருத்து களையும் கொள்கைகளையும் பின்பற்றி அவர்களிடம் ஏமாறினர்; அவர்களை நம்பினர்.

இவ்வாறு ஏமாற்றத்திற்கும் நம்பிக்கைக்கும் உட்பட்ட பழந் தமிழர்கள், அவ்வாரியர்களின் வேதக் கருத்துகளை ஏற்றனர். பின் படிப்படியாக முழுமையும் வளர்ச்சியும் பெறாமலிருந்த அவர்களின் வேத மொழிச் சொற்களையும், நம் பழந்தமிழினத்தவர்கள் பேசிவந்த வட தமிழ் மொழிச் சொற்களையும் கலந்து, மக்கள் புழக்கத்துக்காக சம்ஸ்கிருதம் என்னும் ஒரு புதிய மொழியைச் செய்து கொண்டனர். சம்ஸ்கிருதம் என்னும் சொல்லிற்குக் 'கூட்டிச் செய்யப்பட்டது' (அஃதாவது வேத மொழி, பழந்தமிழ் மொழி ஆகியவற்றை இணைத்துக் கலந்து செய்யப் பெற்றது) என்பது பொருளாகும்.

சம்ஸ்கிருத மொழியை ஆரியர்கள் உருவாக்கிக் கொண்ட பின் அம்மொழியிலேயே தங்கள் பழைய வேதத்தை நான்கு பிரிவுகளாக வகுத்து, அவற்றிற்கு ரிக், யஜுர், சாம, அதர்வண என்னும் நான்கு பெயர்களை இட்டனர். அதன் பின்னர் படிப்படியாக அவற்றுடன் கருத்துகளை ஒட்டிப் பற்பல கதைகளையும் நெறிகளையும் எழுதி அவற்றுக்கு இதிகாஸங்கள், தர்மங்கள் என்று பெயரிட்டனர். அத் தர்மங்களுக்காகவும் சில பல தேவக் கதைகளை எழுதி, அவற் றுக்குப் புராணங்கள் என்று பெயரிட்டு, மக்களிடைப் புழங்க விட்டனர். அவற்றை மக்கள் நம்ப வேண்டும் என்றும் கடைபிடிக்க வேண்டும் என்றும், இல்லாவிடில் அவர்கள் தெய்வக் குற்றத்திற்கு (பாவத்திற்கு) ஆளாகி நரகம் (தீயுலகம்) புகுந்து தண்டனை பெறவேண்டும் என்றும், அத்தண்டனையின் காரணமாக அவர்கள் அடுத்தடுத்த பிறவிகளில்

கொடுமையான விலங்குகளாகவும், நச்சு உயிரிகளாகவும் பிறந்து உழலவேண்டும் என்றும், அவ்வாறின்றி மக்களாகப் பிறந்தால் கீழ்ச்சாதிகளிலேயோ, ஏழ்மையராகவோ, உறுப்புகள் குறைந்தவர் களாகவோ (குருடு, செவிடு, ஊமை, கூன், நொண்டி, முடம், அலி, கொடு நோயாளி - முதலியவர்களாகவோ) பிறந்து துன்பமும் துயரமும் பெற்று வாழ வேண்டும் என்றும் கூறியும் எழுதியும் வைத்துக் கொண்டு மக்களை அச்சுறுத்தித் தங்கள் கருத்துகளுக்கு ஏற்ப உடன்படவும் செயல்படவும் செய்தனர்.

இவையுமன்றி, மக்களைப் பிரமதேவன் படைத்தான் என்றும், அவன் முகத்திலிருந்து படைக்கப் பெற்றவர்களே பிராமணர் களாகிய தாங்கள் என்றும், அவன் தோள்களிலிருந்து படைக்கப் பெற்றவர்களே சத்திரியர்கள் (அரசர்கள்) என்றும், தொடைகளிலிருந்து படைக்கப்பெற்றவர்களே வைசியர்கள் (வணிகர்கள்) என்றும், பாதங்களிலிருந்து படைக்கப் பெற்றவர்களே சூத்திரர்கள் (கீழ் நிலை அடிமை செய்பவர்கள்) என்றும் அவர்கள் பலவாறு கூறி, அவற்றுக்கு அடிப்படையாக வேதங்களைக் காட்டி நம்பச் செய்தனர்.

அத்துடன், அத்தகைய நான்கு பிறப்பினர்களும், வகுப்பினர் களும், இவ்வுலகில் ஆற்ற வேண்டிய கடமைகளை எழுதி வைத்து, அவற்றிற்குத் தர்மங்கள் என்று கூறி மக்களை அவற்றின்படி நடக்க வேண்டும் என்று வற்புறுத்தினர்.

அவர் எழுதி வைத்துக் கொண்ட வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், மனுதர்மம் போன்ற நூல்கள் அனைத்தும் மக்களினத்தை வேறு பிரிப்பன; மக்களினத்துள் உயர்வு, தாழ்வுகள் கற்பிப்பன; அவர்களைப் பல மூட நம்பிக்கைகளுக்கும் அறியாமைகளுக்கும் உட்படுத்துவன; அவர்களின் கருத்துகளுக்கு இந்துமதம் எனும் பெயர்கொடுத்து, மக்களை அவர்கள் மதச் சேற்றுக்கும், பல்வேறு சாதிப் பிரிவுகளுக்கும் உள்ளாக்கினர். பழந்தமிழ் இனத்தவர் அனை வரும் இச் சாதி, மதப் பிரிவுகளுக்கும், இழிவுகளுக்கும் ஆளாகிக் கடந்த மூவாயிரம் ஆண்டுக் காலமாய் பலவேறு அடிமைத்தனங் களுக்கும், அறியாமைகளுக்கும், இழிவுகளுக்கும் உட்பட்டுத் தங்களுக் குள் வேறுபாடுகளை உருவாக்கிக் கொண்டு, ஒற்றுமையின்றி முன்னேறாமல், தங்களுக்குள்ள பழஞ்சிறப்புகளை எல்லாம் இழந்து தவிக்கின்றனர். தாங்கள் தமிழர் என்பதையும், தங்கள் தாய்மொழி தமிழ் என்பதையும் மறந்து, இன்று அவர்கள் மீளா அடிமைகளாய், உரிமைகள்

இழந்து, இவ் வுலக உருண்டையில், பல்வேறு நாடுகளுக்கு ஏதிலிகளாகச் சென்று உழன்று, துன்பப்பட்டு வாழ்ந்து வருகின்றனர்.

அவர்கள் தங்களுக்கென்று ஒரு நாடில்லாமல், அரச அமைப்பு இல்லாமல், பிற இனத்தவர்கள் தங்களை ஆளும்படி அடிமைகளாக இருந்து வருகின்றனர்.

இவர்கள், இக்கால் பலவாறான மூடநம்பிக்கைகளுக்கு ஆளாகி யுள்ளனர். அவர்கள் தங்களின் பகுத்தறிவையே இழந்து விட்டிருக்கின்றனர். தங்கள் தாய்மொழியாகிய தமிழை மறந்து வேறு வேறு மொழிகளைக் கற்பவர்களாகவும், தங்கள் இனத்தவரையே பகைப்பவர்களாகவும், வெறுப்பவர்களாகவும், காட்டிக் கொடுத்து உயிர் வாழ்கிறவர்களாகவும் இருந்து வருகின்றனர். இவர்களின் மூடநம்பிக்கைகளுக்கு அளவில்லை.

மலையை ஒருவன் தூக்குவது! மணலைக் கயிறாகத் திரிப்பது; வானத்தைத் துணிபோல் மடித்து வைப்பது, நில உருண்டையைப் பாயாகச் சுருட்டுவது! பனை மரத்தைப் பிடுங்கி ஒருவன் பல் துலக்குவது! ஒருவன் ஒரே அம்பினால் ஒரு மரத்தின் இலைகள் அத்தனை யையும் ஓட்டை விழும்படி செய்வது! இவ்வுலகில் உள்ள ஒரு கடல் நீர் அனைத்தும் பாலாக இருப்பது! அதில் ஒரு மலையை நிலை நாட்டிப் பாம்பை ஒரு கயிறாகக் கொண்டு மத்துபோல் கடைவது! வெள்ளை யானை ஒன்று இறகு முளைத்துப் பறப்பது! பாம்பின் தலைமேல் ஒருவன் நின்று நாட்டியம் ஆடுவது! பெரிய பாம்பைப் பாயாகக் கொண்டு ஒரு தெய்வக் கணவனும் அவன் மனைவியும் படுத்துக் கொண்டு இருப்பது! பிரம்மன் என்பவன் நான்கு முகங்களொடு இருந்து கொண்டு உயிர்களைச் சட்டிபானைகள் செய்வது போல் செய்து உலகில் உயிர்வாழவிடுவது! அவன் நாக்கில் அவன் மனைவி வாழ்வது! ஒருவன் தன் குடுமியிலேயே தன் இரண்டாம் மனைவியைப் பொதிந்து வைத்திருப்பது! நெருப்பு மழை பொழிவது! வானத்தில் தேர் ஓட்டுவது! பல பேர்கள் மாட்டுக்கும், குதிரைக்கும், குரங்குக்கும், மீனுக்கும், கரடிக்கும் பிறப்பது! அரசன் மனைவிகள் குதிரையைச் சேர்ந்து குழந் தைகள் பெறுவது! ஒரு மண் குடத்திலிருந்து ஒருவன் பிறப்பது! ஒரு குதிரையின் மூக்கிலிருந்து இன்னொருவன் பிறப்பது! வானத்தில் மாளிகை கட்டுவது! மாடு இறக்கை வைத்துக் கொண்டு வானில் பறப்பது! நிலம் வெடித்து அதிலிருந்து குழந்தை பிறப்பது! தேரின் அச்சாணிக்குப் பகரமாக ஒருத்தி தன் விரலை வைத்துக் கொண்டு தேரை ஓட்டுவது!நெருப்புக் குண்டத்திலிருந்து குழந்தைகள் பிறப்பது! உடம்பின் அழுக்குகளைத் திரளையாகத் திரட்டி அதிலிருந்து குழந்தை செய்வது! அக்குழந்தையினுடைய தலையை வெட்டி விட்டு, அதற்குப் பகரமாக யானைத் தலையை வெட்டி அக்குழந்தையின் கழுத்தில்

ஒட்ட வைப்பது! மணலில் பானை செய்து அதில் தண்ணீர் எடுத்து வருவது! ஓர் ஆளின் வாய் வழியாக ஒருவன் வயிற்றுக்குள் புகுந்து, அதைக் கிழித்துக் கொண்டு வெளியே வருவது! நிலாவைப் பாம்பு விழுங்குவது! கதிரவனைப் பாம்பு விழுங்குவது! ஆணோடு ஆண் திருமணம் செய்து கொண்டு குழந்தை பிறப்பது! குழந்தை தாயின் வயிற்றுக்குள் இருக்கும் பொழுதே அனைத்துக் கல்வியையும் கற்பது! பாம்புப் புற்றுக்குள் புகுந்து வேறோர் உலகத்தை அடைவது! கதிரவனுக்கு (சூரியனுக்கு)க் குழந்தை பிறப்பது! நிலவுக்கு (சந்திரனுக்கு)க் குழந்தை பிறப்பது! காற்றுக்கு (வாய்வுக்கு) குழந்தை பிறப்பது! நெருப்புக்கு (அக்னிக்கு)க் குழந்தை பிறப்பது! மழைக்கு (இந்திரனுக்கு)க் குழந்தை பிறப்பது! போன்ற பல்லாயிரக்கணக்கான புளுகு மூட்டைகள் நிரம்பிய கட்டுக் கதைகளே ஆரியர்களின் புராண இதிகாசப் பொய்ச் சரக்குகள்! இம்மூட நம்பிக்கைகளை உண்மைகள் என்று நம்பிக் கொண்டிருப்பவர்களே இந்து மதத்தவர்கள்! இவர்களில் பெரும்பாலரே இன்றைய தமிழ் இனத்தவர்கள்! இவர்களுள் நீங்களும் ஒருவராக இருக்கலாமா? எண்ணிப் பாருங்கள்! உங்கள் அறிவுக்கண் கொண்டு, அறிவியல் உணர்வு கொண்டு சிந்தித்துப் பாருங்கள் ! இம்மூட நம்பிக்கைகளையெல்லாம் உண்மை என்று நம்புவது, சாணியையும், மலத்தையும் உணவு என்று நம்பி உண்ணுவது போலாகும்!

அதுவுமன்றி, பிரம்மதேவன் என்பவன் முகத்திலும், தோளிலும், தொடையிலும் பாதத்திலும் மக்கள் பிறக்க முடியுமா? அப்படிப் பிறந்தவர்கள்தாம் வேறு வேறு வருணத்தினர், குலத்தினர், சாதியினர் என்றால், நாம் அதை நம்பலாமா? அப்படி நம்புபவர்கள்தாம் இந்து மதத்தவர்கள் என்றால் அந்த இந்து மதத்தை நாம் ஒப்பலாமா? நாமும் இந்துக்கள் என்று ஏற்றுக் கொள்ளலாமா? எண்ணிப் பாருங்கள்! சிந்தித்துப் பாருங்கள்!

நீங்கள் மூடநம்பிக்கைகளை உடைய மூடர்களா? அறிவுடைய மக்களா? அவ்வாறானால் இந்த மூட நம்பிக்கைகளைக் கொண்ட நீங்கள் இந்து மதத்திலிருந்தும் அது கூறும் சாதி இழிவுகளிலிருந்தும் வெளியே வாருங்கள்! உங்களை மாந்தராக முன்னேற்றிக் கொள்ளுங்கள்!

உங்களைப் பிணித்திருக்கின்ற சாதி, மதக் கயிறுகளை - கட்டுகளை அறுத்தெறியுங்கள்! மாந்தன் என்னும் உரிமையுடன் இவ்வுலகின் இயற்கைக் காற்றை உட்கொள்ளுங்கள்! நீங்கள் மாந்த இனத்தில் ஒருவர்! நீங்கள் சாதி, மதப் பெயர்களால் அழைக்கப்படக் கூடாது! நீங்கள் முன்னேறிய மாந்த இனத்தவர்! நீங்கள் தமிழர்! உங்கள் தாய்மொழி தமிழ்! உங்கள் நாடு தமிழ்நாடு!.

# மாந்தர்களைத் தின்று உயிர் வாழ்ந்த மாந்தன்!

சில ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற நிகழ்ச்சி. இந்திய நாட்டிலிருந்து ஆய்வு செய்வதற்காக அடிக்கடி அண்டார்டிகாவிற்குக் குழுக்கள் சென்று வருகின்றனர். இதுபோல் ஒரு வானூர்தியில் பனி படர்ந்த துருவப் பகுதிக்குச் சிலர் சென்றனர். அக்குழு இந்தியக்குழு அன்று. பனிப்பகுதிக்குச் சென்ற வானூர்தி இறங்கு முன்னரே ஏதத்திற் (விபத்திற்)குள்ளாகிச் சிதறி விட்டது. அந்தப் பகுதியில் மக்களே கிடையாது; மரம், செடி, கொடிகளும் கிடையாது. ஏதத்திற்குள்ளான வானூர்தியை மீட்க வழியில்லாததால் மீட்புப் பணிகளே நடைபெறவில்லை.

சில மாதங்களுக்குப் பிறகு பனி பொழிவது சற்றுக் குறைந்த பின், மற்றொரு வானூர்தியில் ஒரு குழுவினர் வந்து அங்கே அந்தப் பனி பகுதியில் இறங்கினர். அவர்கள் வானூர்தியை விட்டு ஒவ்வொருவராக வெளியே இறங்கிய போது, அவர்கள் வியப்பினால் திகைத்துப் போயினர். நீண்ட தாடி மீசையுடன் அங்கே ஓர் ஆள் நின்று கொண்டிருந்தான். அவன் பனிப்பகுதி மாந்தன் அல்லன். அவன் ஆங்கிலம் பேசினான். அவனை உசாவி அறிந்த பொழுது, சில மாதங்களுக்கு முன் ஏதத்திற்குள்ளான ஆய்வு வானூர்தியில் உயிர்தப்பிப் பிழைத்திருந்த ஒரே மாந்தன் அவன்தான் என்ற செய்தியறிந்து வந்தவர்கள் மகிழ்ச்சியுடன் கை குலுக்கினர்கள்.

எல்லாமும் சரி, மரம் செடி கொடிகள், பறவைகள் விலங்குகள் எதுவுமே இல்லாத பனிப் பைதரத்தில் அந்த ஆள் உணவுக்கு என்ன செய்தான்? எப்படி இத்தனை நாள்களாக உயிர் வாழ முடிந்தது? விடை காண முடியாமல் அவனையே கேட்டனர். அவனோ விடை சொல்லத் தயங்கினான். அவர்களோ திரும்பத் திரும்பக் கேட்டதினால், அவன் சிதைந்து கிடந்த வானூர்திப் பகுதிகளைக் காட்டினான். ஆர்வம் தாங்க முடியாமல் அங்கிருந்தவர்கள் நொறுங்கிய வானூர்திப் பகுதிக்கு அருகில் சென்று பார்த்த போது..?!

இப்பொழுதுதான் இறந்தவர்கள் போல் அம்மக்கள் சடலங்கள் அங்குச் சிதறிக் கிடந்தன. அவர்கள் கை, கால்களிலிருந்து சதைப் பகுதிகள் அறுத்து எடுக்கப்பட்டிருந்தன!

நடந்தது என்னவாக இருக்கும்? அந்த மீசை தாடி மாந்தனை உசாவினர். அவன் பசிக் கொடுமை காரணமாகத் தன்னுடன் வந்து மடிந்தவர்களின் சடலங்களிலிருந்தே, வானூர்தித் தகடு கொண்டே, கொஞ்சம் கொஞ்சமாக தசைகளை வெட்டிப் பச்சையாகவே, ஒவ்வொரு நாளும் அவன் சாப்பிட்டு வந்திருக்கிறான்...! பனிமுடிய பகுதி என்பதால் குளிர்பதனப் பெட்டியில் வைக்கப்பெற்ற பச்சை இறைச்சி போல் கெடாமல் இருந்திருக்கின்றன அச்சடலங்கள்.

–கலாபன் வாஸ்.

நன்றி: 'இளைய தீபம்', ஏப்.94.

## இளைஞர்களுக்கு அண்ணல் அம்பேத்கரின் அறிவுரை

குமுகாயச் சமநிலைக்கும் உடன்பிறப்பாண்மைக்கும் தடையாக உள்ள பிராமணியமும் முதலாளியமும் உழைக்கும் இனத்தின் இருபெரும் எதிரிகளாக இருக்கின்றன. பிராமணியம் குமுகாயச் சமநிலைகளுக்கு மட்டுமல்லாமல், எல்லாருக்கும் சமமான பொருளியல் வாய்ப்புகள் கிடைப்பதற்கும் பெருந்தடையாக உள்ளது.

இந்த நாட்டில் தொழிலாளர்கள் ஒன்றுபட முடியாமல் இருப்பதற்கும், உரிமைகளைப் பெறத் தடையாக இருப்பதற்கும் சாதி அமைப்பு காரணமாக உள்ளதை மறந்துவிட்டுப் பொதுவுடைமைக் கொள்கை களைப் பரப்பிவிட முடியாது.

இளைஞர்கள் சிறந்ததோர் கொள்கையை - (இலட்சியத்தை) முன் வைத்து, அதை அடைவதற்குப் பாடுபட வேண்டும். நாட்டு நலனுக்கோ தனிப்பட்ட உயர்வுக்கோ உரிய கொள்கையைத் தேர்ந்து கொண்டபின், சோர்வுகள் பல வந்தாலும் தளராத உறுதியுடன் உழைக்க வேண்டும். கடின உழைப்பாலேயே வெற்றிகிட்டும். ஒரு நேரத்தில் ஒரே நோக்கத்தை முன்வைத்தே பாடுபட வேண்டும். வாழ்க்கை என்பது குமுக நலனுக்கு உழைப்பதாகவே இருக்க வேண்டும்.

இளைஞர்கள் கல்வியும் ஒழுக்கமும் பெறவேண்டும். கல்வியை விட ஒழுக்கத்திற்கே முதலிடம் தர வேண்டும். படித்தவன் ஒழுக்கமும் பணிவும் இல்லாதவனாக இருந்தால், அவன் விலங்குகளை விடக் கொடியவன்.

# வாழ்க்கைக்கு அறிவே தூண் !

—அதியமான்.

மாந்தர்களுடைய வாழ்க்கைக்கு இன்றியமையாமை உண்ண உணவு, உடுக்க உடை, படுக்க ஒரு வீடு என்பர். இவற்றை விட மாந்தர்களின் வாழ்வை செப்பமடையச் செய்ய வேண்டுவது அறிவே. அதனாலேயே அறிவை உடைமையாக்க அறிவுடைமை எனச் சான்றோர் அழைத்தனர். எல்லாவகை உடைமைகளைக் காட்டிலும் அறிவுடைமையே மேலான உடைமையாகும். வாழ்வதற்கு ஆன பொருள்கள் ஒன்றுமில்லாதவனாக இருந்தாலும், அறிவு மட்டும் ஒருவனுக்கு இருக்குமானால், அவன் அவனுக்குத் தேவையான யாவற்றையும் ஈட்டிக் கொள்ளமுடியும். அதனாலேயே வள்ளுவப் பேராசான்.

*'அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்*
*என்னுடைய ரேனும் இலர்'*

- எனக் கூறுகிறார்.

அறிவற்றவர்களுக்கு எல்லாவகையான பொருள்களும் குவிந்திருந் தாலும், அறிவில்லாக் கரணியத்தால் அவற்றைத் தொலைத்து விடு வார்கள். பொருள்கள் மிகுதியாக இருந்தால் மட்டும் போதாது; அவற்றைப் பேணிக் காக்கத் தெரியவேண்டும்; தேவை கருதிச் செல விடத் தெளிவான அறிவு வேண்டும்.

பொதுவான அறிவு, பகுத்தறிவு, மெய்யறிவு என மூன்று வகையான அறிவைப் பகுத்துள்ளனர். பொதுவான அறிவு உலக உயிரினங்கள் அனைத்துக்கும் உண்டு. பகுத்தறிவு என்பது நல்லவை கெட்டவை எனக் காண சிந்தித்துக் கண்டு தெளிவது. இதுவும் கூட அஃறினை உயிரினங்களுக்கும் உண்டு. உணவு உண்ணும் போது பகைவரைக் கண்டு தப்பிப் பிழைக்க வழி கண்டு கொள்கிறது. ஆனால் மாந்தர்களிடம் பகுத்தறிவு என்பது மிகுதியாக இருக்கிறது. ஏனென்றால் மாந்தர்களுடைய வாழ்க்கை செம்மையாக விளங்க பகுத்தறிவைப் பயன்படுத்திக் கொண்டே இருக்கவேண்டும். அதற் கடுத்தது மெய்யறிவு. இவ்வறிவு மிக உயர்வான அறிவு. இந்த அறிவுடையவர்களே உலகத்தின் மக்களுக்கு வாழும் வகைகளை நெறிப்படுத்திக் கொடுக்கிறார்கள்.

எனவே இவர்களை மெய்யறிவாளர்களெனப் பாராட்டுகிறோம். மெய்யறிவாளர்களே உலகப் பெரியோர்கள் - பேரறிஞர்கள்.

மாந்தர்களுடைய வாழ்க்கைப்பாதை கரடுமுரடானது. துன்பம் இன்பம் நிறைந்தது. எவ்வளவு எச்சரிக்கையாக இருப்பினும் தன்னை அறியாமலே துன்பங்கள் பல வந்து வறுத்திவிடும். அப்போது அத் துன்பங்களிலிருந்து மீள அறிவு வேண்டும். அதனால் அறிவை

*அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்*
*உள் அழிக்கல் ஆகா அரண்.*

- என்பார் பேராசான் -திருவள்ளுவர். வருந்துன்பத்தை மட்டுமன்று, வந்த துன்பங்களையும் நீக்க அறிவே காக்கும் கருவி.

இப்படிப்பட்ட அறிவைப் பெறச் சிந்திக்க வேண்டும். யார் எதைச் சொன்னாலும் அதிலுள்ள மெய்ப்பொருளைத் தேர்ந்தெடுக்க சிந்திப்பது இன்றியமையாமை. சிந்திப்பதற்குத் தன்னுடைய தாய் மொழிப்பயிற்சியே சிறந்தது. பலமொழிகளைக் கற்றவர்களாக இருந்தாலும், தாய் மொழியிலேயே அவர்களுக்குச் சிந்திக்க முடியும். அதனாலேயே தாய் மொழிக்கல்வியை அறிஞர்கள் வற்புறுத்துகிறார்கள். அறிவைச் செயல்பட வைக்கச் சிந்தனை முகாமை. அனைவரும் நன்கு சிந்திக்க வேண்டும். அவர்களே அறிவுடையவர்களாகத் திகழ்வார்கள். வாழ்க்கைக்குச் சிறப்பாகச் செல்வங்களைத் தேடுவதை விட அறிவைத் தேடுவதாலேயே கவலையற்ற வாழ்வு கிடைக்கும். எனவே அறிவே வாழ்க்கைக்குத் தூண் என உணர்ந்து சிந்தித்து அறிவைப் பெற முயல வேண்டும். ○

---

தனித்தமிழ்ச் சிறுவர் கலை இதழ்

## "தமிழ்ச்சிட்டு"

ஆண்டுக் கட்டணம் : உருபா 18.00
தனியிதழ் : உருபா 1.50

ஓரிதழுக்கு உருபா 3.00 மேனி முன் பணம்
கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

'தமிழ்ச் சிட்டு', சென்னை-600 005

# பேச்சு!

'மாந்தன் ஒருவன் தன் கால் இடறுவதை விட நாவினால் அதிகம் இடறுகிறான்' என்று நபிகள் நாயகம் கூறுகிறார்.

பகுத்தறிவு மாந்தனை விலங்கிலிருந்து பிரித்துக் காட்டுகிறது. ஒருவனின் சிந்தனையையும் கருத்துகளையும் உணர்வுகளையும் மற்றவர்களுக்கு வெளிப்படுத்த மொழி ஒரு கருவியாகப் பயன்படுகிறது.

ஒருவன் தன் நாவை நன்மைக்கும் பயன்படுத்தலாம். தீமைக்கும் பயன்படுத்தலாம். அவனுடைய சொற்கள் நலன்கள் தரத்தக்க விளைவு களையும் ஏற்படுத்தலாம்; மற்றவர்களின் உணர்வைப் புண்படுத்தி, தீய விளைவுகளையும் உண்டாக்கலாம்.

தனது பேச்சாற்றலால் ஒருவன் மக்களிடம் அமைதியையும் உருவாக்கலாம்; அல்லது அதனால் அழிவையும் ஏற்படுத்தலாம்.

ஆக, மக்கள் தொடர்புகளுக்குப் பேச்சு முகாமைப் பங்காற்றுகிறது.

நாக்கு, உள்ளத்தின் நுழைவாயில்! உள்ளத்தின் செய்திகளை ஏந்தி நிற்கிறது!

நாவைச் சரியாகப் பயன்படுத்தாவிடில், வாழ்க்கை நிகழ்ச்சிகளின் திசையே மாறி விடுகிறது.

யாரிடம் எப்படிப் பேச வேண்டும் என்பதும் முகாமை யானது. எடுத்துக்காட்டாக, ஓர் அலுவலகத்தில் ஊழியர்கள் தம் மூத்த அதிகாரிகளிடம் எப்படிப் பேச வேண்டும்; உயர் அதிகாரிகள் ஊழியர் களிடம் எப்படிப் பேசவேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வது இன்றியமையாதது. அவர்களது பேச்சு சரியான முறையில் அமைந் தால் அலுவலகத்தில் ஆக்கநிலையான பணிகள் நடக்கும். இல்லை யேல் பணிகள் கெடும்.

கணவன் மனைவியிடையே நல்ல முறையில் பேச்சு அமைந்து விட்டால் குடும்பம் நல்ல முறையில் நடக்கும். ஒருவரையொருவர் புரிந்து கொள்ளாமல் கணவனும் மனைவியும் பே(ஏ)சிக் கொண்டி ருந்தால் குடும்பத்தில் புயல் உருவாகும். அதன் சீற்றத்தில் கணவன் ஒருமூலைக்கும் மனைவி ஒரு மூலைக்கும் பியத்துக் கொண்டு போகலாம்.

எனவே நாகாக்க.

மாந்தன் ஒருவன் இறையச்சம் கொண்டு, பயனுள்ள வாழ்வை மேற்கொள்ள நாவைக் கட்டுப்படுத்துதல் முகாமையானது.

நாவைத் தவறாகப் பயன்படுத்துதல் கூடாது. எதையும் ஆராயாமல் கண்டதையும் சொல்லித் திரிவதோ, செய்தியாகப் பரப்புவதோ தவறு.

நாம் பேசும்பொழுது என்ன பேசுகிறோம் என்று உணர்ந்து நாவைக் கட்டுப்படுத்த வேண்டும். நாம் சினம் கொள்ளும் பொழுது நம் வாயிலிருந்து என்ன வருகிறது என்று நமக்கே தெரியாவிட்டால் அதன் விளைவு கொடுமைதான்.

நாக்கு நாகரிமற்ற முரட்டுக்குணம் உள்ளவனைப் போன்றதாகும். அதைத் தனியே விட்டுவிட்டால் அது தம்மையே கொன்று விடும். நாக்கு ரட்டியை விடக் கூர்மையானது.

அரட்டை அடிப்பது நமது பொன்னான நேரத்தை வீணடிப்பதாகும்.

---

இக்கால உலகில் பொய் பேசுவது ஒரு கலையாகி விட்டது.. பொய் மட்டும் கூறினால் போதும். பல தீய செயல்கள் செய்த விளைவு கிடைத்து விடும். நினைப்பது ஒன்றும் பேசுவது ஒன்றுமாக ஒருவர் நடக்கக் கூடாது. தன்னிடம் இல்லாத ஒரு பண்பை இருப்பதாகக் காட்ட முயல்வதும் பொய்யே ஆகும். எனவே, நாம் எப்பொழுதும் உண்மையே பேச வேண்டும்.

புறங்கூறுதல் ஒரு குமுகாயத் தீமையாகும். அஃது ஒருவரை ஒருவர் தவறாகப் புரிந்து கொள்ள வழி வகுக்கிறது. மேலும் அது குமுகாய ஒழுங்கைக் குலைக்கும் ஆற்றலாக உள்ளது.

புறங்கூறுதல் நண்பர்களிடையே பிளவுகளை ஏற்படுத்தும். மற்றவர்களைப் பற்றி அவதூறு பேசுவதோ அவர்களுக்குப் பட்டப் பெயர் சூட்டி அழைப்பதோ கூடாது. குரலை உயர்த்திப் பேசுதல் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

முகமன் கூறுதலும் தவிர்க்கக் கூடியதே! பாராட்டுதலுக்கும் முகமன்(வெற்றுப் புகழ்ச்சி) கூறுதலுக்கும் இடையே நிறைய வேறுபாடு உண்டு. ஒரு வெற்றிச் செயலைப் பாராட்டும் போது அளவுக்கதிகமாக மிகைப்படுத்திப் புகழ்வதே முகமன் (முகஸ்துதி) கூறுவதாகும். செல்வமுள்ளவர்கள், அதிகாரத்தில் உள்ளவர்கள் முதலியவர்களை அவர்கள் செய்த எளிய செயல்களுக்காகப் புகழக்கூடாது. இவையும் பயனற்ற பேச்சுகளே.

வசை பாடுதலும், கிண்டல் (பகடி) செய்வதும் கோணல் மாணலான உணர்வுகளை வெளிப்படுத்துதலும் தகாத சொற்கள் பேசுதலும் மதிப்பைக் குறைக்கும் செயல்களாகும். அத்தகையவர்கள் கீழ்த்தரமான வர்களாகவே மதிக்கப்படுகிறார்கள். பலபொருள்-படப் பேசுவது, ஐயத்திற்குரிய பேச்சு பேசுவது போன்றவை தவறாகப் புரிந்து கொள்ளும் வாய்ப்புடையவை.

எச்சரிக்கையாகப் பேசுவது நாவடக்கத்தையும் மன அமைதி யையும் தருகிறது. பலவகைத் தீங்குகளிலிருந்து நம்மைப் பாதுகாக்கிறது.

உண்மையே பேச வேண்டும்; சுருக்கமாகவும் பேச வேண்டும்.

-அடிப்படை: 'மீராமைதீன்'
'பேச்சு' - கட்டுரை
'சமரசம்' 16-31. மார்ச்சு : 94

---

## இந்தியா ஒரு நாடு, ஒரு தேசமன்று!

இந்தியா ஒரு நாடு; (Country) ஆனால் ஒரு (Nation) தேசமன்று. ஏனெனில், ஒரு பொது மொழியையோ அல்லது பொதுப் பண்பாட்டையோ பெற்றிருக்க வேண்டிய தேவையை அது நிறைவு செய்யவில்லை.

– இர்ஃபான் அபீப், Social Scientist-37.பக்:16

இந்தியாவை ஒரு தேசம் என்பது முழுக்க முழுக்க வரலாற்றிவியல் அற்ற கூற்றாகும். மொழியால், எல்லையால், பண்பாட்டால் தெளிவாகப் பிரிந்துள்ள பெரிய தேசிய இனங்கள் குறைந்த அளவு இந்தியாவில் பன்னிரண்டு உள்ளன. தெலுங்கு, அசாமி, வங்காளி, ஒரியா, தமிழ், மலையாளம், கன்னடம், மகாராட்டிரம், குசராத்தி, பஞ்சாபி, இந்தி (இந்துத்தானி), மற்றும் காசுமிரி, இவற்றுக்கப்பால் மணிபுரி, திரிபுரி, நாகர்கள், கரோ மற்றும் சந்தால் போன்ற ஏராளமான சிறு தேசிய இனங்களும் இருக்கின்றன.

-பிரகாசு காரட், Social Scientist - 37 பக்.7

# பசுமை நிறைந்த அந்தமான் தீவுகள்

பசுமை நிறைந்த அந்தமான் நிக்கோபார் தீவுகள் 572 தீவுக் கூட்டங்களைக் கொண்ட சிறுசிறு தீவுகளாகும். இவற்றின் மொத்த நிலப்பரப்பு 8248 அயிர மாத்திரி (கி.மீ.) ஆகும்.

வங்காள விரிகுடாக் கடலில் 700 அயிர மாத்திரி (கி.மீ) பரப்பில் பரந்து விரிந்து கிடக்கின்ற இத் தீவுக் கூட்டங்கள், அனைத்துக் கடல் வளங்களையும் ஒருங்கே பெற்றுத் திகழ்கின்றன.

தீவுகளின் தலைநகர் போர்ட் பிளேயர் (PORT BLAIR). இது சென்னையிலிருந்து 1190 அ.மா. (கி. மீ) தொலைவிலும், கல்கத்தாவி லிருந்து 1255 அ.மா. தொலைவிலும், விசாகப்பட்டினத்திலிருந்து (ஆந்திரம்) 1200 அ. மா. தொலைவிலும் இருக்கிறது.

1991 - ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கின்படி தீவுகளின் மக்கள் தொகை 2,79,111 பேர்கள் ஆகும். ஆனால், உண்மையில் இது மூன்று இலக்கத்திற்கும் அதிகமாக இருக்கும். இங்கு ஆண்டு சராசரி மழையளவு 3180 அமா. (மி.மீ) ஆகும். தட்ப வெப்ப நிலை 23 பாகை (டிகிரி) நூற்றளவி (செ.கி) -இலிருந்து 31 பாகை வரை. இத்தீவுகளின் காடுகள் 36 விழுக்காடு ஆதிக்குடிகளின் பாதுகாக்கப்பட்ட பகுதி என்று அரசு அறிவித்துள்ளது.

வங்காள விரிகுடாக் கடலில் அமைந்திருக்கும் இத்தீவுகளின் மலைப்பகுதி பர்மாவிலிருந்து இந்தோனேசியா வரை பரவியிருக்கிறது. அந்தமான் காடுகள் மிக அடர்த்தியுடையன, பல வகையான பறவைகள் பூக்களைக் கொண்டன. கடற்கரை ஓரங்களில் தென்னை, பனை போன்ற மரங்கள் ஓங்கி வளர்ந்து அழகுடன் அமைந்துள்ளன. கடலைச் சுற்றிலும் நீர் விளையாட்டிற்கு ஏற்ற பகுதியாக விளங்குகிறது. பசுமை நிறைந்த அந்தமான் தீவுகள் பல வகைகளிலும் அழகு மிளிர அமைந்து புதிய சுற்றுலா நடுவமாக உருவாகிக் கொண்டுள்ளது. விடுமுறைக் காலங்களை அமைதியுடனும் மகிழ்வுடனும் கழிக்க, அந்தமான் தீவுகள் சிறந்தனவாக உள்ளன.

**போர்ட் பிளேயர் :**

அந்தமான் நிக்கோபார் தீவுகளின் தலைநகரம் போர்ட் பிளேயர் நகரமாகும். சுற்றுலாவின் அனைத்து நடவடிக்கைகளும் போர்ட் பிளேயரை நடுவமாகக் கொண்டே செயல்படுத்தப் பெறுகின்றன. இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் அமைந்திருக்கும் போர்ட் பிளேயர்

நகருக்குச் சென்னையிலிருந்தும், கல்கத்தாவிலிருந்தும் வானூர்திப் போக்குவரத்து நடைபெறுகிறது. சென்னையிலிருந்து போர்ட் பிளே யருக்கு ஞாயிறு, அறிவன் (புதன்), போக்குவரத்து தற்போது நடை பெறுகிறது. கல்கத்தாவிலிருந்து திங்கள், செவ்வாய், வியாழன், காரி (சனி)க்கிழமைகளில் வானூர்திப் போக்குவரத்து தற்போது விடப் படுகிறது.

போர்ட் பிளேயர் நகராட்சியில் ஏறத்தாழ ஒன்றரை இலக்கம் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களில் முதன்மையான இடத்தைத் தமிழர் கள் பெற்றுள்ளனர். இருப்பினும் இந்தியாவில் உள்ள அனைத்து மாநில மக்களும் போர்ட் பிளேயர் நகரில் வாழ்ந்து வருவது குறிப்பிடத் தக்கது. கப்பல் போக்குவரத்து சென்னை, கல்கத்தா, விசாகப் பட்டினத்திலிருந்து போர்ட் பிளேயருக்கு வந்து செல்கிறது. உள்தீவு களுக்கு போர்ட் பிளேயரிலிருந்து கப்பல் விடப்பெறுகிறது.

**(இ)ரெங்கத்:**

போர்ட் பிளேயரிலிருந்து 95 அ.மா. (கி.மீ) தொலைவில் நடு அந்தமானில் (இ)ரெங்கத் நகர்ப்புறம் அமைந்துள்ளது. சுற்றுலாவுக்கு ஏற்ற அளவற்ற திறன்களைப் பெற்றுள்ளது. அம்குஞ்ச் என்னும் கடற் கரை (இ)ரெங்கத்திலிருந்து 10 அ.மா. தொலைவிலுள்ளது. இந்தக் கடற்கரையைப் புதுமைக் கடற்கரையாக மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்றிருக்கின்றன. போர்ட் பிளேயரி லிருந்து (இ)ரெங்கத்திற்கு கடல்வழிப் பயணத்தில் மலைக்குன்று களுக்கு நடுவே சிறு ஆற்றின் மீது பயணம் செய்வது மிகவும் மகிழ்ச்சியுடையதாகவிருக்கும். சாலை வழிப் பயணத்தின் மூலமும் (இ)ரெங்கத் சென்று அடையலாம். அங்கு பன்னிரண்டு படுக்கைகளைக் கொண்ட 'விருந்தினர் மாளிகை' (Guest House)யும் தனியார் விடுதிகளும் பயணிகள் தங்குவதற்கு வசதியாக உள்ளன.

**மாயா பந்தர்:**

போர்ட் பிளேயரிலிருந்து வடக்கே 160 அ.மா. (கி.மீ.)இல் 'மாயா பந்தர்' என்னும் தீவு உள்ளது. மாயா பந்தர் அருகே உள்ள ஏவிசு என்னும் மற்றொரு தீவும், சிறப்பு வாய்ந்த 'கர்மடாங்' கடற்கரையும் சுற்றுலாவுக்கும் , நீர் விளையாட்டுக்கும் தகுந்த இடங்களாகும். மாயா பந்தரிலிருந்து காளிகட் மற்றும் பங்காரா என்னும் தீவுகளுக்கு சிறிய ஆற்றின் வழியாகக் கப்பல் பயணம் செல்வது மறக்க முடியாத நினைவாகும்.

**டிகிலிப்பூர் :**

வட அந்தமானிலுள்ள **டிகிலிப்பூர்** என்னும் தீவு அந்தமான் நிக்கோபார் தீவுகளின் 'அரிசிக் களஞ்சியம்' என்னும் பெயர் பெற்ற தீவாகும். போர்ட் பிளேயரிலிருந்து வடக்கே 185 அ.மா. தொலைவில் இந்தத் தீவு அமைந்திருக்கிறது. காலிப்பூர், ஏரியல் பே, லம்பாபே ஆகிய குட்டித் தீவுகள் மணற்பாங்கான கடற்கரைகளைப் பெற்றுள்ளன. இந்தப் பகுதிகள் கடற்கழியுடன் கூடியதாக அமைந்திருப்பதால் பார்ப்பதற்கு நல்ல அழகுடன் இருப்பதுடன் சுற்றுலாவுக்கும் சிறந்த இடங்களாக உள்ளன.

அந்தமான் தீவுக் கூட்டத்திலிருக்கும் ஒரே ஆறாக **கல்பாங்** ஆறு உள்ளது. அங்குள்ள மிக உயர்ந்த மலைக்குன்று 782 மாத்திரி (மீட்டர்) உயரம் உள்ளது. மலையேறும் வீரர்களுக்குச் சிறந்த இடம் டிகிலிப்பூர். இத்தீவுக்கு உள்தீவுப் படகுப் போக்குவரத்து விடப்பெற்றுள்ளது. பொதுப் பணித்துறை விருந்தினர் விடுதி பயணிகளுக்கும் தங்குமிடமாகப் பயன்படுகிறது.

**நீளத்தீவு (லாங்க் ஐலண்ட்)**

போர்ட் பிளேயரிலிருந்து (இ)ரெங்கத் செல்லும் கடல்வழிப் பாதையில் 90 அ.மா. தொலைவில் **நீளத்தீவு** (Long Island) தீவு உள்ளது. மிகச் சிறிய அளவிலான இந்தத் தீவு பறவையைப் போன்ற அமைப்பைப் பெற்றுள்ளது. இந்தத் தீவிலிருந்து 5. அ.மா. தொலைவில் 'லாலாஜிபே' தீவு உள்து. இந்தத் தீவு படகு ஓட்டுவதற்கும் மீன் பிடித்தலுக்கும் சிறந்த இடம். நீளத் தீவு, போர்ட் பிளேயர் மற்றும் (இ)ரெங்கத் தீவுடன் உள்தீவு படகுப் போக்குவரத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.

**நிக்கோபார் :**

அந்தமான் தீவுக் கூட்டங்களைப் போல் நிக்கோபார் என்று அழைக்கப்பெறும் தனித்த தீவுக் கூட்டங்களில் மொத்தம் 28 சிறு தீவுகள் உள்ளன. இவற்றின் மொத்த பரப்பளவு 1841 சதுர அயிர மாத்திரி களாகும். அந்தமானிலிருந்து 10 பாகை தள்ளி நிக்கோபார் தீவுக் கூட்டங்கள் தனிமைப்பட்டுள்ளன. நிக்கோபாரில் தென்னை, பாக்கு போன்ற மரங்கள் மலிந்து கிடக்கின்றன.

**பெரிய நிக்கோபார் (கிரேட் நிக்கோபார்) மற்றும் சிறிய நிக்கோபார் (லிட்டில் நிக்கோபார்)** தீவுகளில் நீண்ட வாலுடன் கூடிய கருப்பு இனக் குரங்குகள் காணப்படுகின்றன. இந்தக் குரங்குகள் நண்டு சாப்பிடும்

பழக்கமுள்ளவை. நிக்கோபார் புறா, மற்றும் அரிதாகக் காணப்படும் 'மெக்காபோர்' பறவை இனம் இங்கு தான் காணப்படுகின்றன.

**கார் நிக்கோபார் :**

இளந்தென்றல் வீசும் பகுதி கார் நிக்கோபார் ஆகும். இது, தென்னை, பனை, ஈந்து, கமுகு (பாக்கு) போன்ற கிளையில்லாத மரங்களைப் பெற்றுள்ள சமவெளிப் பகுதியாகும். இதனுடைய பரப்பளவு 126.9.ச. அ. மாத்திரி (கி.மீ) ஆகும். வளமான நிலமாகவும் தென்னை மரக் கூட்டங்களைப் பேரளவு கொண்டதாகவும் கார் நிக்கோபார் அமைந்துள்ளது. நிக்கோபாரில் உள்ள காட்டு மக்கள் தங்கள் குடிசைகளை மரத்தூண்களால் ஓர் ஆள் உயரத்திற்கும் மேலாகத் தூக்கி வைக்கப் பெற்றவாறு கட்டிக் கொள்கின்றனர்.

இந்தக் குடிசைகளில் மரத்தால் செய்யப்பட்ட ஏணிகளின் மீது ஏறி வீட்டிற்குள் நுழைய வேண்டும். ஈட்டி ஏந்திய மாந்த உருவப் பொம்மைகள் மரத்தில் செதுக்கப்பட்டுப் பெரும்பாலான வீடுகளில் வைக்கப்பட்டுள்ளன. கார் நிக்கோபாரில் தங்குவதற்குச் சுற்றுலா மாளிகை, விருந்தினர் மாளிகை இணைவீடுகள், தங்கும் விடுதிகள் ஆகியவை இக்கால் கட்டப்பட்டுள்ளன. வளைகுடாத் தீவுகள் கடற்கரைச் சுற்றுப் பயணத்திற்குத் தகுந்த இடங்களாகும்.

நடு அந்தமான் ஏல்லாக்கிலுள்ள இராதாநகர் கடற்கரையும் (இ)ரெங்கத் அருகேயுள்ள, அம்குஞ்ச் கடற்கரையும் சுற்றுலா நடுவங்களாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இராதாநகர் கடற்கரை அழகுப்படுத்தப்பட்டு சுற்றுலா விடுதிகளும் திறக்கப்பட்டு உள்தீவு படகுப் போக்குவரத்து வசதிகள் செய்யப் பெற்றுள்ளன.

உள்நாட்டுப் பயணிகள் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் தவிர, பிற அனைத்துப் பகுதிகளுக்கும் எவ்வகை அனுமதியுமின்றிச் சென்று வரலாம். வெளிநாட்டுப் பயணிகள் தொடர்புடைய அதிகாரிகளின் அனுமதியைப் பெற்றுச் சுற்றுலா நடுவங்களுக்குச் சென்று பார்க்கலாம்.

போர்ட் பிளேயர்நகர், ஹேவ்லாக், லாங் ஐலண்டு, நீல் தீவு, மாயா பந்தர், (இ)ரெங்கத், டிகிலிப்பூர் - ஆகிய தீவுகளில் பயணிகள் பகல், இரவு தங்கலாம். ஜாலிபாய், ரெட்ஸ்கின், தென் சின்கியூ, மவுண்ட் கேரியட், மதுபன் ஆகிய தீவுகளுக்குப் பகலில் மட்டும் சென்று திரும்பலாம். ராஸ்தீவு, வண்டூர், சிறிய டாப்பு ஆகிய தீவுகளின் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இத் தீவுகளில் ஒரு மாதகாலம் வரை தங்க அனுமதிக்கப்படுகின்றனர்.

**நன்றி: தீ. பரவட்டும். 24-2-94**

கோது—நார்; மை—மாவு; நார்ப் பொருளும் மாவுப் பொருளும் சேர்ந்த தவசம்(தானியம்): இவற்றுடன் வாற்கோதுமை, எள் ஆகியவையும் பயிரிடப் பெற்றன. அத்துடன் அங்கு வாழ்ந்த மக்கள் ஆடு, மாடு, எருமை, பன்றி, செம்மறி, கழுதை ஆகிய விலங்குகளையும் வளர்த்து வந்துள்ளனர். கோழிகளும் நாய்களும் கூட வளர்க்கப் பெற்றுள்ளன.

ஆண்களும் பெண்களும் பருத்தியிலான மென்மையான உடைகளை அணிந்துள்ளனர். தங்கம், வெள்ளி, செம்பு, யானை மருப்பு (தந்தம்) ஆகியவற்றைக் கொண்டு செய்த காப்பு, மாலை, காதணி, மூக்கணி, நெற்றிப் பட்டம், கணையாழி முதலிய அணிகளை அணிந்துள்ளனர்.

இந் நாகரிக மக்களின் வீடுகளில் குளியலறைகள் இருந்துள்ளன. வீதிகள், வடிகால்கள் இந்நகரங்களில் நன்கு அமைந்திருந்தன. எழுத்துகளை இந்நாகரிக மக்கள் பயன்படுத்தியுள்ளனர். இங்கு அகப்பட்ட சிலைகள், இலச்சினைகள் ஆகியவற்றைக் கொண்டு, இங்கு வடதமிழர்(திராவிடர்) நாகரிகம் செழித்திருந்துள்ளது என ஆய்வாளர்கள் உறுதிப் படுத்தியுள்ளனர். —நன்றி.

அறிவியல் களஞ்சியம்,—தமிழீழம் (எரிமலை. 13-3.)

O தமிழ்நாட்டில் வடஆற்காடு, அம்பேத்கார், பெரியார், கோவை, நீலமலை, திருச்சி போன்ற மாவட்டங்களில் ஏறத்தாழ 6500 ச.அ.மா. (கி.மீ.)பரப்பில் சந்தன மரங்கள் உள்ளன.

O இன்று உலகில் உள்ள ஏறத்தாழ 60 நாடுகளில் தமிழர்கள் வாழ்கிறார்கள்.

தமிழ்நாட்டில் வாழும் தமிழர்கள் 4 கோடியே 18 இலக்கம் பேர் என்றால், இந்தியாவின் பிற மாநிலங்களில் 1 கோடி தமிழர்கள் வாழ்கிறார்கள்.

இலங்கையில் 58 இலக்கம் பேர்; பர்மாவில் 3 இலக்கம் பேர், மலேசியாவில் 18 இலக்கம் பேர், மொரீஷியஸ் நாட்டில் 1.50 இலக்கம் பேர், இங்கிலாந்தில் 1 இலக்கம் பேர், பிரான்சில் 1 இலக்கம் பேர், அமெரிக்காவில் 60 ஆயிரம் பேர், கனடாவில் 62 ஆயிரம் பேர், ஆஸ்திரேலியாவில் 45 ஆயிரம் பேர், செர்மனியில் 40 ஆயிரம் பேர் எனும்படி உலகம் முழுவதும் கணிசமான தொகையில் தமிழ் மக்கள் வாழ்கின்றனர்.

O ஒரு நடுத்தர மாந்தனுடைய நெஞ்சாங்குலை ஒரு நாளைக்கு ஏறத்தாழ ஓர் இலக்கம் முறை துடிக்கிறது. அது நாளைக்கு 23 ஆயிரம் தடவை காற்றை உள்ளிழுத்து வெளிவிடுகிறது.

O உலகம் முழுவதற்கும் பொதுவான நேர அளவு கிரீன் விச் நேரத்தை அடிப்படையாகக் கொண்டே 1884 முதல் கணிக்கப் பெறுகிறது.

O கடந்த 10 ஆண்டுக்காலப் போரில், இலங்கை அரசுக்குப் பெருத்த இழப்புகள் ஏற்பட்டுள்ளன என்று கூறப் பெறுகிறது. சிங்கள அரசுப்படை சார்பில் 336 படையதிகாரிகள், 9718 படைவீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 5000 படை வீரர்கள் காணுமல் போயுள்ளனர்.

மேலும் கடந்த பத்து ஆண்டுகள் ஏழு படைத் தளபதிகள் பதவியேற்றுள்ளனர். ஐந்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்கள் மூன்று பாதுகாப்பு அமைச்சர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

# அவர்தாம் பீமராவ் அம்பேத்கார்!

தாழ்வுற்றுக் கிடத்திடும் மக்கள் எல் லார்க்கும்
தலைவராய்க் கொதித்தெழுந்து நின்றார்—ஒரு
தனியராய்ப் போராடி வென்றார்—அவர்
வாழ்வுற்று மேலேற—
வழிவகுத்து உயர்வுபெற—
வாழ்வெல்லாம் போராடிச் சென்றார்!—இங்கு
வழியெல்லாம் சிலையாக நின்றார்!

அவர்தாம் பீமராவ் அம்பேத்கார்!
ஆரியர்த்தின் மேல்தொடுத்தார் அரிமாப் போர்!

அறிவுக்கு மாமலை!
அன்புக்குப் பழக்குலை!
உரிமைக்கு எரிமலை!
உழைப்புக்கு இரும்புவலை! —(அவர்தாம்)

ஏழ்மையில் வாடினார்!
எதிரியைச் சாடினார்!
வீழாது போராடினார்!—அவர்
வெற்றியை முடிசூடினார்! —(அவர்தாம்)

பட்டங்கள் பல பெற்றார்!
பல்கலை மிகக் கற்றார்!
சட்டங்கள் இந்தியர்க்குச் செய்தார்—அவர்
சாதிகள்மேல் அம்புகளை எய்தார்! —(அவர்தாம்)

இழிவுகளின் வேரறுத்தார்!
ஏழ்மையர்க்கு நீர் உகுத்தார்!
பழிபுராண வேதங்கள் செய்த
பார்ப்பனர் மேல் போர் தொடுத்தார்!— (அவர்தாம்)

மக்களுக்குக் கற்பியுங்கள் என முழங்கினார்—அவர்
மனங்கள் தெளிய அறிவு விளங்க நூல்கள் வழங்கினார்!
தக்கபடி உரிமை முழங்க அணிகள் திரட்டினார்:
தாழ்வு,அச்சம், மடமை,இழிவை அடித்து விரட்டினார்!
—(அவர்தாம்)

(அம்பேத்கார் பிறந்த நாளை ஒட்டி ஆசிரியர் எழுதியது.)

---

**அன்பர்கள் கவனிக்க!**

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கொள்கிறோம் —அமைச்சர்.

---

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. (தமிழகம்)